3. அரசியலமைப்புச் சட்டப்பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்—பேரவைத் தலைவர் தீர்ப்பு (தொடர்ச்சி).

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றம் சுமுகமான சூழ் நிலையிலேயும் ஆரோக்கியமான அரசியல் அடிப்படையிலேயும் நடக்கவேண்டுமென்று நமக்கெல்லாம் மெத்த ஆர்வம் உண்டு. அப்படித்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தச் சூழ் நிலை நீடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் ஒரு கருத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் அவர்களுடைய அரசியல் கட்சி செய்த தீர்மானத்தின் அடிப்படையில் அரசியல் சாசனத்தின் ஒரு பிரிவைத் தனியாக அச்சிட்டு அந்தப் படிவத்தைத் தீயிட்டுக் கொளுத்தியது சம்பந்தமாக இந்த அவையில் இரண்டு நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு சபையினுடைய முன்னவர் அவர்கள் அது நீதிமன்றத்திற்கு இப்பொழுது சென்றிருக்கக்கூடிய காரணத்தால் அதனுடைய தீர்ப்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை எழுப் பினார்கள். இன்றைக்கு ஒரு உறுப்பினர் எரித்ததாக எனக்குத் தகவல் வந்தது. காலையில் எழுப்பினார்கள். அது தொடர் பாகத்தான்....

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : நான் இந்தச் சபையிலே இந்தப் பிரச்சினை நடந்து முடிந்த பிறகுதான் உள்ளே நுழைந் திருக்கக்கூடிய காரணத்தால், நான் இருந்து கேட்ட அந்த விஷ யத்தை நான் மரியாதையோடு நினைவூட்டி, நீதிமன்றத்தி னுடைய தீர்ப்பு வரும் வரை நாம் காத்திருந்து முடிவெடுக்கலாம் என்று முன்னவர் சொல்ல, தாங்களும் அந்த அடிப்படையிலே சில கருத்துரைகள் வழங்கி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச் சினையை அன்றைக்குக் கிளப்பினார்கள். அவை முன்னவர் பதில் அளித்தார். பதில் அளிக்கின்ற நேரத்தில் அங்கே, கிரிமினல் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, தீர்ப்பை எதிர் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அதோடு விட்டு விட்டேன் என்னைப் பொறுத்தவரையில். இது நான் திடீரென்று எடுத்த முடிவு அல்ல ; திடீரென்று வழங்கிய தீர்ப்பு அல்ல. இரண்டு மூன்று நாட்களாக I have given active consideration. I have given a good deal of thought over it. இப்படி வந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதே, ஏழு சட்ட மன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், அரசியல்

1986 நவம்பர் 24]

சட்டத்தால் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தால் மக்கள் உரிமை கிடைக்கப் பெற்று மக்களின் சார்பில் இங்கே வரக்கூடியவர்கள் அரசியல் சட்டத்தை இப்படிச் செய்கிறார்களே என்று நானே எண்ணிப் பார்த்து, நானே தன்னிச்சையாக எடுத்த முடிவுதான், நானே அளித்த தீர்ப்புதான்.

(பிற்பகல் 12-10.]

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : நீங்கள் எடுத்த முடிவு பற்றியோ சொன்ன தீர்ப்பு பற்றியோ நான் கேள்வி கேட்க விரும்பவில்லை. அரசியல் சாசனத்தின் எழுத்தை மாத்திர மல்ல; அரசியல் சாசனத்தினுடைய உணர்வையும் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறை நம் அனைவருக்கும் உண்டு. ஆனாலும் கூட நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வரும்வரை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே விளக்கிவிடுகிறேன். நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கு, சட்டத்தை மீறியதற்கான வழக்கு ; சட்டத்தை எரித்தது சம்பந்தமான கிரிமினல் வழக்கு. அதில் வரக்கூடிய முடிவு, எந்தவகையான தண்டனை வழங்குவார்கள் என்கிற தன்மைபற்றி நான் குறிப்பிட வில்லை. இங்கே நான் அளித்த தீர்ப்பு உறுப்பினர்கள் அளித்திருக்கிற பிரமாண வாக்குமூலத்தை மீறியது பற்றியதாகும். நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகின்றவரையில் இதற்காக நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்கை போலீசார் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கை முன்வைத்து இங்கே தீர்ப்பு வழங்க வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்த அவை, இந்த மன்றம் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும் ; அரசியல் சட்டத்தை மதிக்க வேண்டும். இதிலே வேறு பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : நான் தீர்ப்பைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. நான் விரும்புவது ஒரு சுமுகமான சூழ்நிலையை * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறுதியில் குறிப்பிட்ட வார்த்தைகள் வேண்டாம். அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன. அரசியல் சட்டத்தை நான் பாதுகாக்க வேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தின்படி வரக்கூடிய உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தில் நம்பிக்கை வைத்து வரக்கூடிய உறுப்பினர்கள் அந்த அரசியல் சட்டத்தைப்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பாதுகாக்க வேண்டும். சாதாரண மக்கள் செய்கிறார்கள் என்றால் அது வேறு. அரசியல் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே இருக்கிற சலுகைகள், உரிமைகள் (பிரிவிலேஜஸ்), எல்லாவற்றையும் 'என்ஜாய்' பண்ணுகிறவர்கள் அந்தச் சட்டத்தை எரிப்பது சரியல்ல; முறையும் அல்ல.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தீவிரமாக தாங்கள் அளித்த தீர்ப்பை தாங்கள் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது வழி இருந்தால், அன்பு கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்வதற்கு இடமே இல்லை. எல்லோருடைய ஒப்புதலுடன் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ் பாண்டிய மன்னன் மீண்டும் வந்தது போன்ற தோற்றமும் அதே பாண்டியனுடைய பெயரை வைத்துக் கொண்டிருக்கிறவருமான சபாநாயகர் அவர்களே, உங்களுடைய தலைமையிலே மிகச் சிறப்பான நிகழ்ச்சிகள் கடந்த சில நாட்களாக நடந்து கொண்டிருப்பதை நாம் பார்த்தோம். பாபு ஜெகஜீவன்ராம் அவர்களுடைய இரங்கல் தீர்மானம் தொடங்கி அவர் எடுத்து வைத்த தேசிய மொழிகள், தாய் மொழிக் கொள்கைகளின் தன்மையைத் தாங்கள் சொன்னபோது உங்களுடைய உணர்வுகளை மிகச் சிறப்பாக எடுத்து வைத்தீர்கள்.

மறுநாளே இந்திய அரசியல் அமைப்பும், இந்திய தேசிய ஒருமைப்பாடும், இந்தியாவில் இருக்கிற தாய் மொழிகளும் என்றும் சிறப்படைய வேண்டும், சிறப்பிக்க வேண்டும் என்று சூளுரைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை இங்கே உங்களுடைய முன்னாலே நாங்கள் எல்லாம் வரவேற்று, ஒரு சிலரைத் தவிர, மற்ற அனைத்து பெருமக்களும் வரவேற்றுப் பேசியதை, எதிர்த்தவர்கள் கூட பல நல்ல தன்மைகளைச் சுட்டிக்காட்டிப் பேசியதை நீங்கள் இங்கே பார்த்தீர்கள்.

அதற்குப் பின்னாலே பலரைப் பற்றிய அல்லது சிலரைப் பற்றிய ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் எழுப்ப, அதற்கு நீங்கள் விடையும் பதிலும் தீர்ப்புமாகச் சொல்கின்ற நேரத்திலே மிக

வேதனையோடு இந்தச் செயலைச் செய்கிறேன் என்றுதான் நீங்கள் சொன்னீர்கள். எனவே உங்கள் உணர்வு எந்த அளவுக்கு துன்பக் கடலிலே மூழ்கி, தவித்து, திகைத்தது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது.

''பைந்தமிழால் வைதாரையும் வாழவைப்பேன்'' என்று சொன்ன அந்த பரம்பரையில் வந்த நமது பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே என்னென்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை தினமும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், எங்களுக்கு வேதனை வருகிறபோது எல்லாம் நீங்கள் துடைத்திட துடித்தெழுந்து வருகிறீர்கள். நீங்களே ஒரு வேதனையான காரியத்தைச் செய்து இருக்கிறேன் என்று சொல்லும்போது நாங்கள் அதிலே பங்கு கொள்ள வேண்டாமா? சாதனையை ஒருவர் படைத்தாலும் கூட அந்த சாதனையை மேலும் முறியடிப்பது உண்டு. அதைப் போல நீங்கள் எழுதிய தீர்ப்பை இன்னொருவர் மாற்ற வேண்டுமென்றோ, நாங்களே உங்கள் கருத்தை மாற்றவேண்டுமென்றோ கூறவில்லை. நீங்கள் எழுதிய தீர்ப்பை தெரிவிக்கின்ற நேரத்திலே மிக வேதனையோடு சொன்னீர்கள். அந்த உங்களுடைய வேதனையோடு அனைவருடைய வேதனையையும் தீர்க்க வழி இருக்கின்ற ஒரு வகையிலே உங்கள் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபரிசீலனைக்கே இதில் இடமில்லை. திடீரென்று எழுதப்பட்ட தீர்ப்பு அல்ல இது. ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவித்து, பத்திரிகைகளில் எல்லாம் அறிவித்து, கட்சியின் மூலம் செயற்குழுவில் தீர்மானம் போட்டு அறிவித்து, நாள்தோறும் பொது இடத்தில் அரசியல் சட்டத்தை கொளுத்திக்கொண்டிருப்பவர்களை, எப்படி அனுமதித்து விவாதத்திலே ஈடுபடுத்த முடியும்?

நான் அரசியல் சட்டத்தின் சார்பாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறேன். அரசியல் சட்டத்தை நிலைநாட்டுவதற்காகத்தான் இந்தச் சபாநாயகர் பதவியிலே நீங்கள் எல்லாம் என்னைத் தேர்ந்தெடுத்து அமர்த்தியிருக்கிறீர்கள். இந்த அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பில்தான் நான் என்னுடைய பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மறுபரிசீலனைக்கு இடம் இல்லை.